# அமித்ஷா - எடப்பாடியின் மெகா கூட்டணி கனவில் பேரிடி;
# உறுதியானது தி.மு.க. - தே.மு.தி.க. கூட்டணி!

★ NDA கூட்டணிக்கு தே.மு.தி.க. உறுதியாக வரும் என எதிர்பார்த்த எடப்பாடி பழனிசாமி மற்றும் அமித்ஷாவிற்கு இது பெருத்த ஏமாற்றம். வலிமையான கூட்டணி அமையும் என எதிர்பார்த்த அ.தி.மு.க-பா.ஜ.க.வின் எதிர்பார்ப்பு பொய்த்து உள்ளது.

★ அ.தி.மு.க. கூட்டணியா - தி.மு.க. கூட்டணியா என முடிவெடுக்காமல் இருந்து வந்த பிரேமலதா கட்சியின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு வெற்றி வாய்ப்பு அதிகம் உள்ள கூட்டணியான தி.மு.க. கூட்டணி பக்கம் வந்துள்ளார்.

★ ஈஷா மையத்தில் நடந்த மகா சிவ ராத்திரி நிகழ்ச்சியில் எஸ்.பி.வேலு மணியோடு இணைந்து பிரேமலதா கலந்து கொண்டதை வைத்து அ.தி.மு.க. கூட்டணிக்கு தே.மு.தி.க. வரும் கூட்டணி வலிமையாகும் என செய்திகள் பரவிய நிலையில் தற்போது பிரேமலதாவின் முடிவு பா.ஜ.க.-அ.தி.மு.க.விற்கு நிச்சயம் பின்னடைவாகவே பார்க்கப்படும்.

★ 2011 தேர்தலில் தே.மு.தி.க - அ.தி.மு.க. உடன் கூட்டணி அமைத்ததால் அந்த தேர்தலில் வெற்றி பெற்றது அ.தி.மு.க.

★ 2019, 2020களில் தே.மு.தி.க.வுக்கு ராஜ்யசபா சீட் தருவதாக வாக்குறுதி தந்து தரவில்லை என்பது தே.மு.தி.க.விடம் அதிருப்தியாக இருந்தது. அதற்கு இப்போது பிரேமலதா எடப்பாடிக்கு பாடம் புகட்டியுள்ளார்.

★ சமீபத்தில் நடைபெற்ற தே.மு.தி.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் 60க்கும்மேற்பட்ட மாவட்டச்செயலாளர்கள், முன்னாள் சட்டமன்ற-நாடாளுமன்ற உறுப்பினர்கள் தி.மு.க.வுடன் கூட்டணி அமைக்க வேண்டும் என விருப்பம் தெரிவித்துள்ளனர்.

★ 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற வேண்டும் என்ற முனைப்பில் இருக்கும் தி.மு.க. ஒவ்வொரு தொகுதிகளிலும் குறைந்தது 5000 முதல் 25,000 வாக்குகளை கொண்டிருக்கும் தே.மு.தி.க.வைச் சேர்ப்பதன் மூலம் 200 தொகுதிகளை வெல்ல முடியும் என கணக்கு போட்டு காய் நகர்த்தி வந்தது.

**★ தற்போது தே.மு.தி.க.வின் வரவு தி.மு.க. கூட்டணிக்கு கூடுதல் பலன். தி.மு.க. கூட்டணியின் வெற்றி வாய்ப்பை ஏகதேசம் உறுதி செய்து விட்டதாக கருதப்படுகிறது.**

**★ ஏற்கனவே 42-45% வாக்கு வங்கி வைத்துள்ள தி.மு.க. கூட்டணியில் தற்போது தே.மு.தி.க. இணையும் போது 200 தொகுதிகளில் வெற்றி என்ற ஸ்டாலினின் அரசியல் கணக்கு நிறைவேறும் சூழல் உறுதியாகிறது.**

★ தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்து வரும் தே.மு.தி.க.வின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு இம்முடிவை பிரேமலதா எடுத்துள்ளதாக தெரிகிறது. MLA, MP கள் இல்லாத நிலையை மாற்றி வரும் தேர்தலில் கணிசமான MLA களை சட்டமன்றத்திற்கு அனுப்பவும் அடுத்து வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தங்களுக்கான MP களை உறுதி செய்வது மற்றும் உள்ளாட்சி தேர்தலில் வென்று கவுன்சிலர் உள்ளிட்ட பதவிகளை அதிகரிப்பது என அடுத்த ஐந்தாண்டுக்குள் தே.மு.தி.க.வை மூன்றாவது பெரிய கட்சியாகமாற்றவே இம்முடிவை பிரேமலதா எடுத்துள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

**★ வட தமிழ்நாட்டின் வலுவான பா.ம.க. இரண்டாகப் பிரிந்து வலுவற்ற சூழலில் தே.மு.தி.க. மீண்டும் வட தமிழ்நாட்டில் தனது இடத்தை பிடித்து கட்சியை வலுப்படுத்தும் வாய்ப்பு உள்ளது.**

★ அதே போல தென் தமிழ்நாட்டிலும் அ.ம.மு.க. மட்டுமே அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியில் இணைந்துள்ளது. அதுவும் கூட முழு மனதுடன் அமையவில்லை. சசிகலா- ஓ.பி.எஸ். ஆகியோர் இன்னும் பிரிந்தே உள்ளனர். ஆகவே கள்ளர் சமூக வாக்குகள் கொஞ்சம் NDA கூட்டணிக்கு செல்லுமே தவிர இதர முக்குலத்தோர் வாக்குகள் NDA கூட்டணி மீது அதிருப்தியில் உள்ளனர் ஆகவே அந்த பகுதியிலும் தே.மு.தி.க. தன்னை இந்த தேர்தலில் வலுப்படுத்தி கொள்ள முடியும்.

★ தே.மு.தி.க. விற்கு பக்கபலமாக இருக்க கூடிய தெலுங்கு பேசும் மக்கள், இதர பிற்படுத்தப்பட்ட சமூக வாக்குகளும் சிதறாமல் தே.மு.தி.க.விற்கு இம்முறை கிடைக்கும். இதை எல்லாம் கருத்தில் கொண்டு வெற்றி வாய்ப்பு அதிகம் உள்ள தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க. இணைந்துள்ளதாக தெரிகிறது.

★ 2011 எதிர்க்கட்சி அந்தஸ்து பெற்ற தே.மு.தி.க. இடையே சரியான கூட்டணி அமைக்காமல் வலுவிழந்தது தற்போது தி.மு.க. கூட்டணியில் இணைந்ததன் மூலம் மூன்றாவது பெரிய மாநில கட்சியாக உயரும் வாய்ப்பு தே.மு.தி.க.விற்கு கிடைக்கும்.

**★ தி.மு.க. கூட்டணி மேலும் வலுவடைந்து 200 தொகுதிகளில் வெற்றி என்ற இலக்கை அடைய தே.மு.தி.க. உதவும். தே.மு.தி.க. வின் இரண்டாவது இன்னிங்க்ஸை தொடங்க தி.மு.க. கூட்டணி உதவும். ஆகவே இது பிரேமலதாவின் அரசியல் சாதுர்ய முடிவாக பார்க்கப்படுகிறது. இரு பக்கமும் win - win சூழ்நிலை என்பதால் தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க. இணைந்துள்ளது.**

★ ஏற்கனவே வலுவிழந்துள்ள அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி தொண்டர்களை இச்செய்தி சோர்வுறச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

## தலைவர் — முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# சைதை எம்.கிருஷ்ணமூர்த்தி இல்லத் திருமண விழா!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் — அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலை!
## அமைச்சர் பெருமக்கள் — கழக முன்னணியினர் வாழ்த்துகின்றனர்!

**சென்னை, பிப்.20-**

**பெருநகர சென்னை மாநகராட்சி பத்தாவது மண்டலகுழு தலைவர், சைதை மேற்கு பகுதி கழக செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., இல்லத் திருமண விழாவை கழக தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைக்கிறார்.**

கழக இளைஞரணி செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மணமக்களை அமைச்சர் துரை முருகன், டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, க.பொன்முடி, கே.கே.எஸ்.எஸ்.ஆர், தங்கம்தென்னரசு, தா.மோ.அன்பரன், அன்பில்மகேஷ் பொய்யாமொழி, பி.கே.சேகர்பாபு, சா.சி.சிவ சங்கர், கோவி.செழியன், ஆ.ராசா எம்.பி., எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., ஆர்.எஸ்.பாரதி, டி.கே.எஸ். இளங்கோவன், தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி., உள்ளிட்ட பலர் வாழ்த்துகின்றனர்.

சென்னை தெற்கு மாவட்டம் - சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பெருநகர சென்னை மாநகராட்சி பத்தாவது மண்டல குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி - கி.ரமணி ஆகியோரின் மூத்த புதல்வன் கி.விஜய்கிரண் - ஜி.கீர்த்தனா அவர்களின் திருமணம் நிகழும் திருவள்ளுவர் ஆணடு 2057, மாசி மாதம் 8ம் நாள் 20.02.2026 (வெள்ளிக்கிழமை) காலை 9 மணி முதல் 10.30 மணிக்குள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் சென்னை தேனாம்பேட்டை அண்ணாசாலையில் உள்ள காமராஜர் அரங்கத்தில் துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையிலும், சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும், மண்டலகுழு தலைவர் இரா.துரைராஜ் எம்.சி., தலைமைபொதுக்குழு உறுப்பினர் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., களக்காடி எல்லப்பன், மின்னல் கந்தப்பன், பகுதி துணை செயலாளர் ஆர்.ரமேஷ், வட்டகழக செயலாளர்கள் எம்.நாகா, எஸ்.பி.கோதண்டம், தா.மோகன்குமார் எம்.சி., ஆகியோர் வரவேற்பில் தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று திருமணத்தை நடத்தி வைக்க உள்ளார்.

அன்று மாலை 6.30 மணிக்குமேல் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

மணமக்களை வாழ்த்துவோர் கழக பொதுசெயலாளர் - கனிமவளம் மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழக பொருளாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர்.பாலு, கழக முதன்மை செயலாளர் - நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு, கழக துணை பொது செயலாளர் க.பொன்முடி, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் - கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், விருதுநகர் தெற்கு மாவட்ட கழக செயலாளரும் -வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர், விருதுநகர் வடக்கு மாவட்ட கழக செயலாளர் -நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம்தென்னரசு, கழக துணை பொது செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.ராசா, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் - குறு, சிறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் - பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி, சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் - இந்து சமயஅறநிலைத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அரியலூர் மாவட்ட கழக செயலாளர் - போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தலைமை கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்க பாண்டியன், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., கழக துணை அமைப்புச் செயலாளர் எஸ்.ஆஸ்டின், கழக தலைமை நிலைய செயலாளர் துறைமுகம் காஜா, கழக தலைமை நிலையச் செயலாளர் பூச்சிமுருகன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியாராஜன், துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் க.சுந்தர், மயிலை த.வேலு, எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏஎம்வி.பிரபாகர்ராஜா, ஜெ.கருணாநிதி, ஐ.பரந்தாமன், ஜோசப் சாமுவேல், ஐட்ரீம் இரா.மூர்த்தி, எஸ்.அம்பேத்குமார்,

பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் குழு தலைவர் நே.சிற்றரசு, தலைமை கழக - மாவட்ட கழக நிர்வாகிகள் காசிமுத்து மாணிக்கம், க.தனசேகரன் எம்.சி., பாலவாக்கம் க.சோமு, வேளச்சேரி பி.மணி மாறன் எம்.சி., எம்.எஸ்.ஹரிபாபு, ரத்னா லோகேஷ்வரன் எம்.சி., எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன் எம்.சி., பாலவாக்கம் மு.மனோகரன், வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் எம்.சி., வாசுகிபாண்டியன், பகுதி கழக - ஒன்றிய கழக செயலாளர்கள் கே.கண்ணன் எம்.சி., மு.இராசா எம்.சி., பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன் எம்.சி., வி.இ.மதியழகன் எம்.சி., நொளம்பூர் வே.ராஜன் எம்.சி., எம்.விநாயகமூர்த்தி, வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி., அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி, கோவிலம்பாக்கம் ஜி.வெங்கடேசன், ந.ராமலிங்கம் எம்.சி., மா.பா.அன்புதுரை, ச.பரமசிவம், கே.ஏழுமலை, வே.வினோத், நந்தனம் மதி எம்.சி., எஸ்.முரளி, எஸ்.மதன்மோகன் எம்.சி., எ.ஆர்.பி.எம்.காமராஜ் எம்.சி., பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.கே.ஏழுமலை, உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜ், பி.எஸ்.முருகேசன், அ.அரிகிருஷ்ணன், ஆர்.பாலசுந்தரம், அடையார் பி.ஜே.பாஸ்கர், ராமாபுரம் வ.செல்வகுமார் எம்.சி., த.பஷீர், வீர.கனிமொழி,

பெருநகர சென்னை மாநராட்சி மாமன்ற உறுப்பினர்கள் ராஜாஅன்பழகன், வழக்கறிஞர் ப.சுப்பிரமணி, பொன்.வர.லோகு, எஸ்.பாஸ்கர், கோமதிமணிவண்ணன், கார்த்திகாபாஸ்கர், உமாஆனந்தன், பா.யாழினி, நிலவரசி துரைராஜ், மாலினி அண்ணாதாசன், எம்.இ.ஸ்டாலின், ரமணி மாதவன், செல்விரமேஷ், ஹேமலதாகணபதி, சங்கர்கணேஷ், எஸ்.பாரதி, உள்ளிட்ட வட்ட கழக நிர்வாகிகள், மாணவர் அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, தொழிலாளர் அணி, பொறியாளர் அணி, மகளிர்அணி, மகளிர் தொண்டர் அணி, சிறுபான்மை நல உரிமைபிரிவு, ஆதிதிராவிடநலக்குழு, நெசவாளர் அணி, மீனவர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவுப்பேரவை, வர்த்தகர்அணி, தகவல்தொழில் நுட்ப அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, தொண்டர்அணி, சுற்றுச்சூழல் அணி, மருத்துவர் அணி, வழக்கறிஞர் அணி, அயலக அணி, ஆகிய அணிகளை சார்ந்த பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், சைதை மேற்கு - கிழக்கு பகுதிக்குட்பட்ட வட்ட கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், வட்ட செயற்குழு உறுப்பினர்கள், வட்ட இளைஞர் அணி நிர்வாகிகள், பாக இளைஞர் அணி நிர்வாகிகள், பாகபொறுப்பாளர்கள், பாக களப்பணியாளர்கள், கழக முன்னோடிகள், ஆகியோர் மணமக்களை வாழ்த்துகின்றனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.2.2026) 2024–25 மற்றும் 2025–26 ஆம் ஆண்டுகளுக்கான சிறந்த உடற்கல்வி இயக்குநர், உடற்கல்வி ஆசிரியர், சிறந்த நடுவர், சிறந்த பயிற்றுநர்கள், சிறந்த விளையாட்டு ஒருங்கிணைப்பாளர், சிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு முதலமைச்சரின் விளையாட்டு விருதுகள் மற்றும் தலா ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், திரு.வி.க.நகர் தெற்குப்பகுதியில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு 76வது வட்ட கழக செயலாளர் எஸ்.சசிகுமார் தலைமையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் திராவிடர் இயக்க தமிழர் பேரவை – தலைவர் சமூக நீதி கண்காணிப்பாளர் சு.ப.வீரபாண்டியன், அகில இந்திய காங்கிரஸ் பேரியக்க மூத்த தலைவர் பீட்டர் அல்போன்ஸ், மாநிலச் செயலாளர், சி.பி.ஐ மு.வீரபாண்டியன் ஆகியோர் வாழ்த்துரைத்தனர். இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., எம்.சாமிகண்ணு, செ.தமிழ்வேந்தன், சரிதா மகேஷ்குமார் எம்.சி, இசட்.ஆசாத் எம்.சி, புனிதவதி எத்திராசன் எம்.சி., வானவில் விஜய் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.